தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2021

**11 வயதுப்பிரிவு**

(01.01.2010 – 31.12.2010 வரையில் பிறந்தோர்)

## பேராற்றல் மிகு தலைவர் மாமா

தமிழீழ மண்ணை மீட்கப் புலிக்கொடி ஏற்றி, புதுவீரம் படைத்து, தமிழ் வீரத்தை எமது தலைமுறையினருக்கு மீளவும் காட்டி, தொடர் வெற்றிகள் பலவற்றை நிலைநாட்டி, தமிழரின் உரிமைப் போரினைத் தலைமையேற்று வழிநடத்திய தமிழ்த் தேசிய இனத்தின் தன்னிகரற்ற அடையாளம், பேராண்மை மிகு பேரொளி, அறவழியில் மறப்போர் செய்த விடுதலைப்போராளி எங்கள் தலைவர் மாமா.

எங்கு சென்றாலும் தாக்கப்பட்ட தமிழினத்தைக் காப்பதற்காய் வீரத்தின் காவியம் படைத்தளித்த பெருந்தலைவன். வையகத்தில் தமிழினத்துக்கு முகவரியைப் பெற்றுத்தந்திட்ட வரலாற்று வல்லமையாளர் எங்கள் தலைவர் மாமா.

“என்று தணியும் இந்த சுதந்திர தாகம்! என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்! என்று எமது இன்னல்கள் தீர்ந்து பொய்யாகும்!” என புலம்பித் திரிந்து, விதியை நொந்த தமிழ் இனத்தை உயிர்பெறச் செய்த பெருவீரன். மண்ணையும் மக்களையும் அரவணைத்துக் காத்து நிற்கும் ஆண்தாய்.

ஆய்வுகளாலும் அளந்து விட முடியாத ஆற்றலின் வடிவம் அவர். எல்லையற்ற மன உறுதியின் இருப்பிடம் அவர். அன்பின் இலக்கணம் அவர். தமிழினத்தின் இலட்சிய உணர்வாய், எங்களின் உயிர் மூச்சாய் அன்றும் இன்றும் என்றும் இருப்பவர் எங்கள் தலைவர் மாமா. இத்தனை பேராற்றல் கொண்டு பிஞ்சுகளின் நெஞ்சிலும் நிறைந்திருப்பவரைப் புலித்தலைவர் என்று சொல்லுதல் தகுமோ? அவர் தமிழினத் தலைவரன்றோ!

எங்கள் மாமா காட்டுகின்ற வழி அறத்தின் பாற்பட்டது. அடிமை வாழ்வை அடியோடு அறுத்தெறியும் வல்லமை மிக்கது. எம்மை எமக்கு இனங்காட்டி, எம் இனத்திற்காய் வாழ்கின்ற பண்பை வளர்ப்பது. எத்தடைவரினும் அத்தடை உடைத்து எங்கள் இலக்கை அடைகின்ற வல்லமையை எமக்குத் தந்து நிற்கிறார் எங்கள் தலைவர் மாமா.

நான் தலைவர் மாமாவைப் பற்றிக் கற்றதும் கேட்டதும் கடுகளவே! ஆனாலும், ‘நம் தலைமுறையோடு தமிழினத்தின் துயர்கள் விடுபட்டு, தமிழனுக்கென்ற தமிழீழத் தனிநாடு விடுதலை பெறும்’ என்ற நம்பிக்கை உணர்வை எனக்குள் ஊட்டுகிறார் என் தலைவர் மாமா!

நன்றி,
வணக்கம்.